P4

PRIMARY SCHOOL

SECOND SEMESTRAL ASSESSMENT - 2013

TAMIL LANGUAGE - PAPER 2

PRIMARY 4

**Name :** ________________________ (   )

**Class : 4 -** _____

**Date :**

**Marks :**

Name of teacher :

28 Questions 45 marks

Total Time : 1½ hr

This booklet consists 10 pages

DO NOT OPEN THIS BOOKLET UNTIL YOU ARE TOLD TO DO SO.

FOLLOW ALL INSTRUCTIONS CAREFULLY.


ANSWER ALL THE QUESTIONS.

Parent's Signature :____________________

Date : ________________

*கீழ்க் கொடுக்கப்பட்டுள்ள படங்களையும் சொற்றொடர்களையும் கொண்டு ஒரு கட்டுரை எழுதுக :*

<u>கட்டுரை 13</u>




| | |
|---|---|
| தூக்கக் கலக்கமாக | நம்பினாள் |
| யார் வந்தாலும் | பூட்டைத் திறந்து |
| தலையாட்டினாள் | கைகால்களைக் கட்டி |

CA 2. Paper-4

## வேற்றுமை (8ம)

<u>கோடிட்ட இடங்களை நிரப்புவதற்குப் பொருத்தமான வேற்றுமை உருபு ஏற்ற சொல்லைக் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களிலிருந்து தேர்ந்தெடு. அதன் எண்ணை அடைப்புக்குறிக்குள் எழுது.</u>

நள்ளிரவு நேரத்தில் மாறன் ஒரு வங்கியில் காவல் புரிந்துகொண்டிருந்தான். அப்போது , அங்குத் திருடிக்கொண்டு வெளியே வந்த ஒரு **(Q1)** ______ அவன் கையும் களவுமாகப் பிடித்துவிட்டான்.

கள்வன் பயந்து நடுங்கினான். மாறன் அவனைப் பார்த்துச் சிரித்தான். அவன் **(Q2)** ______ , " நீ ஏன் இப்படிப் பயப்படுகிறாய் ? நீ திருடிய **(Q3)** _________ பாதியைக் கொடு. நான் உன்னை விட்டு விடுகிறேன் , " என்றான்.

அதற்குத் திருடன் , " நான் களவாடிய **(Q4)** ______ தப்பிச் செல்லவே திட்டமிட்டிருந்தேன். அதில் சிறிதளவுகூட உனக்கு நான் தரமாட்டேன் ! " என்றான்.

**Q1.**
(1) திருடனை
(2) திருடனுக்கு
(3) திருடனிடம்
(4) திருடனோடு ( )

**Q2.**
(1) கள்வனால்
(2) கள்வனை
(3) கள்வனின்
(4) கள்வனிடம் ( )

Q3. (1) பணத்திற்கு
(2) பணத்தில்
(3) பணத்தோடு
(4) பணத்தை ( )

Q4. (1) பொருளுக்கு
(2) பொருளோடு
(3) பொருளின்
(4) பொருளை ( )

## செய்யுள் (5ம)

பின்வரும் செய்யுள் / பழமொழிகளில் கோடிட்ட இடத்தை நிரப்புவதற்கு ஏற்ற சொல்லைத் தேர்ந்தெடுத்து அதன் எண்ணை அடைப்புக்குறிக்குள் எழுது

Q5. ஈவது __________ .

( 1 ) இகழ்ச்சி ( 2 ) இகழேல்

( 3 ) விலக்கேல் ( 4 ) விளம்பேல் ( )

Q6. ஔவியம் __________ .

( 1 ) கரவேல் ( 2 ) பேசேல்

( 3 ) ஒழியேல் ( 4 ) மறவேல் ( )

Q7. அன்பான நண்பனை ஆபத்தில் __________ .

( 1 ) அறியலாம் ( 2 ) சந்திக்கலாம்

( 3 ) அழைக்கலாம் ( 4 ) நம்பலாம் ( )

Q8. அளவுக்கு __________ அமுதமும் நஞ்சு.

( 1 ) உண்டால் ( 2 ) வாங்கினால்

( 3 ) குறைந்தால் ( 4 ) மிஞ்சினால் ( )

Q9. அறிஞர்க்கு அழகு __________ அடங்கல் .

( 1 ) படித்துணர்ந்து ( 2 ) கேட்டுணர்ந்து

( 3 ) சிந்தித்துணர்ந்து ( 4 ) கற்றுணர்ந்து ( )

## தெரிவுவிடைக் கருத்தறிதல் (10ம)

<u>பின்வரும் பகுதியைக் கருத்தூன்றிப் படி</u>

ராமன் என்ற பணக்காரன் ஒரு நாயைச் செல்லமாக வளர்த்து வந்தான். அதற்கு நன்கு உணவு இடுவதும் , அதனோடு விளையாடுவதுமே அவனுடைய பொழுதுபோக்காக இருந்தது. கொழு கொழுவென்று வளர்ந்திருந்த நாய் , முரட்டுத்தனம் கொண்டதாக விளங்கியது. நாய் தனது எஜமானனான ராமனைத் தவிர்த்து , வேறு யாரைப் பார்த்தாலும் குரைத்துக்கொண்டு அவர்கள்மீது பாய்ந்து கடிக்கும்.

ஒருநாள் ஏழை ஒருவன் பண உதவி கேட்டு ராமனின் வீட்டிற்கு வந்தான். வாசலில் நின்றுகொண்டிருந்த ராமனின் நாய் , அவன்மீது பாய்ந்தது. பயந்து போன ஏழை , பக்கத்தில் கிடந்த தடி ஒன்றை எடுத்து நாயை ஓங்கி அடித்தான். நாய் வலியில் முனகியவாறு வீட்டிற்குள் ஓடியது. நடந்ததை அறிந்த ராமன் கடுஞ்சினம் கொண்டு , " என் நாய் என்ன தவறு செய்திருந்தாலும் , இப்படியா

அதைக் காயப்படுத்துவது ! " என்று கூறி ஏழையை நீதிபதியிடம் அழைத்துப் போனான்.

நீதிபதி வழக்கை விசாரித்தார் . ராமன் , " என் நாய் மிகவும் சாது. அது யாரைக் கண்டாலும் வாலை ஆட்டிக்கொண்டு மகிழ்ச்சியாக ஓடும். குழந்தைகள்கூட அதனுடன் விளையாடுவார்கள். இவன் வேண்டுமென்றே தடியால் என் நாயை அடித்துப் படுகாயப்படுத்தி இருக்கிறான். நீங்கள்தான் அவனுக்குத் தக்க தண்டனை வழங்கவேண்டும் ! " என்று சொன்னான்.

ஏழை , தனக்கு ஏற்பட்ட பயங்கர அனுபவத்தை எடுத்துக்கூறி , தன் உயிரைக் காக்கவே , தடியை எடுத்து நாயை அடித்ததாகக் கூறினான். நாயையும் அதன் கூர்மையான பற்களையும் கவனித்த நீதிபதி , ஏழையின் சொற்களில் நியாயம் உள்ளதை அறிந்து , ஏழையின் சார்பாகத் தீர்ப்பு வழங்கினார்.

Q10. ராமனின் நாய் எப்படிப்பட்ட குணமுடையது ?

( 1 ) சாதுவானது

( 2 ) நன்றியுள்ளது

( 3 ) முரட்டுத்தனமானது

( 4 ) அறிவுள்ளது ( )

Q11. ஏழை ராமனின் வீட்டிற்கு ஏன் வந்தான் ?

( 1 ) ராமனிடம் உதவி கேட்க

( 2 ) ராமனை நலம் விசாரிக்க

( 3 ) ராமனை நீதிபதியிடம் அழைத்துச் செல்ல

( 4 ) நாயை அடிக்க ( )

Q12. ராமன் ஏன் நீதிபதியிடம் போனான் ?

( 1 ) நாயைக் குணப்படுத்துவதற்கு

( 2 ) ஏழையைத் திருத்துவதற்கு

( 3 ) ஏழைக்குத் தண்டனை வாங்கித் தருவதற்கு

( 4 ) நாயை திருப்திபடுத்துவதற்கு ( )

Q13. ராமன் நேர்மையுடன் நடந்துகொள்ளவில்லை என்பதை எவ்வாறு அறியமுடிகிறது ?

( 1 ) ஏழை தன் நாயை அடித்துவிட்டான் என்று புகார் தந்ததன் மூலம்

( 2 ) ஏழையை நீதிபதியிடம் அழைத்துக்கொண்டு போனதன் மூலம்

( 3 ) தன் நாய் மிகவும் சாது என்று கூறியதன் மூலம்

( 4 ) ஏழைக்குப் பணம் தராததன் மூலம் ( )

Q14. நீதிபதி ஏன் ஏழை சொன்னதை நம்பினார் ?

( 1 ) அவர் நாயைக் கூர்ந்து கவனித்ததால்

( 2 ) ஏழை கதறி அழுததால்

( 3 ) ராமனிடம் சாட்சி ஏதும் இல்லாததால்

( 4 ) நாய் அவரை முறைத்துப் பார்த்ததால் ( )

## முன்னுணர்வுக் கருத்தறிதல் (8ம)

பின்வரும் பகுதியில் 4 கோடிட்ட இடங்கள் உள்ளன. அவற்றை நிரப்புவதற்கு அடியில் கொடுக்கப்பட்டுள்ள சொற்களிலிருந்து மிகச் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து அதன் எண்ணை அடைப்புக்குறிக்குள் எழுது

| | |
|---|---|
| அழகப்பன் என்னும் சிறுவன் இருந்தான். அவன் மிகவும் Q15 ______ . ஒருநாள் அவன் தன் நண்பர்களுடன் பந்து விளையாடிக்கொண்டிருந்தான். பந்து பறந்து போய் ஒரு கம்பத்தின் நுனியை Q16 ______ . அந்தக் கம்பம் ஒரு குழாய் போல அமைந்திருந்ததால் , பந்து அதனுள் விழுந்துவிட்டது. | Q15 ( ) <br> Q16 ( ) |
| பந்தை Q17 ______ எடுப்பது என்று தெரியாமல் சிறுவர்கள் தவித்தார்கள். அழகப்பன் உடனே ஓர் ஏணி கொண்டு வந்து கம்பத்தோடு சாய்த்தான். பின்னர் ஒரு வாளி நிறைய தண்ணீர் எடுத்து வந்தான். அவன் ஏணியில் ஏறித் தண்ணீரைக் குழாயினுள் ஊற்றினான். பந்து Q18 ______ மிதந்து வந்தது. சிறுவர்களின் கவலையும் தீர்ந்தது. | Q17 ( ) <br> Q18 ( ) |

| | |
|---|---|
| 1. உருண்டு | 2. எங்கே |
| 3. குறும்புக்காரன் | 4. மேலே |
| 5. நுழைந்தது | 6. கெட்டிக்காரன் |
| 7. எப்படி | 8. மோதியது |

சரியான சொல்லைத் தேர்ந்தெடுத்துக் கோட்டில் எழுது.

ஒலி வேறுபாடு (10 ம.செ)

19. ______________ ஏறுவதில் சரவணன் திறமைசாலி.

20. பாட்டியின் ______________ மிகவும் காய்ந்து இருந்தது.

21. சூரியனின் ______________ என் கண்களைக் கூசச் செய்தது.

22. பொங்கலில் அம்மா ______________ கொட்டினார்.

23. மான் ______________ தழைகளைத் தின்னும்.

| | |
|---|---|
| வெல்லத்தை | வெள்ளத்தை |
| ஒலி | ஒளி |
| மலை | மழை |
| இலை | இளை |
| தோல் | தோள் |

## சுயவிடைக் கருத்தறிதல் (9ம)

பின்வரும் பகுதியைக் கவனமாகப் படி. கீழே கொடுக்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுது.

நெப்போலியன் சிறுவனாக இருந்தபோது , அவன் படித்துக்கொண்டிருந்த பள்ளிக்கு அருகே ஒரு கிழவி பழம் விற்றுக்கொண்டிருந்தாள். அவள் ஆப்பிள் , திராட்சை , வாழை போன்ற கனிகளை விற்றாள். பழங்கள் , விலை மலிவாகவும் சுவை அதிகமாகவும் இருந்ததால் , பள்ளி மாணவர்களுக்கு அவளை மிகவும் பிடித்திருந்தது. நெப்போலியனும் நாள் தவறாது அவளிடமிருந்து கனிகளை வாங்கிப் புசித்து வந்தான். ஒருநாள் நெப்போலயன் தன்னிடம் தரப்பட்ட பணத்தைத் தொலைத்துவிட்டான். எனவே , அக்கிழவிடமிருந்து பழத்தைக் கடனுக்கு வாங்கி உண்டான், மறுநாள் அதற்கான பணத்தைத் தந்துவிடுவதாக வாக்கு அளித்தான்.

ஆனால் அதற்குள் , நெப்போலியனின் தந்தைக்கு வேறு ஊருக்கு வேலை மாற்றம் கிடைத்தது. அதனால் , நெப்போலியனின் குடும்பத்தார் திடீரென அவ்வூரைவிட்டுச் செல்ல வேண்டியதாயிற்று. இச்செய்தியைக் கேட்ட சிறுவன் கிழவியிடம் பணத்தைத் தர பள்ளியை நோக்கி ஓடினான். அச்சமயம் கிழவி அங்கில்லை. அவள் அன்று தனது கடையை மூடிவிட்டு வீட்டிற்குச் சென்றுவிட்டாள்.

பல ஆண்டுகள் கழிந்தன. நெப்போலியன் பிரான்ஸ் நாட்டின் பேரரசன் ஆனான். ஒருநாள் , மீண்டும் அவன் தன் சொந்த ஊருக்குத் திரும்பினான். அப்போது தான் கடன்பட்டிருந்த கிழவியைத் தேடிப் போனான். பாட்டிக்கு அப்போது கண் பார்வை மோசமாகிவிட்டது. எனவே அவளால் , நெப்போலியனை அடையாளம் தெரியவில்லை. நெப்போலியன் , அவளிடம் தான் பட்ட கடனை விளக்கிவிட்டுப் பணத்தை திருப்பித் தந்தான்.

கேள்விகளுக்கு விடை எழுதுக

24. கிழவி எவற்றை விற்றாள்? (1 மதிப்பெண்கள்)

25. நெப்போலியன் ஏன் கடனுக்குப் பழத்தை வாங்கி உண்டான்? (2 மதிப்பெண்கள்)

26. நெப்போலியன் கிழவிக்கு அளித்த வாக்கு என்ன? (2 மதிப்பெண்கள்)

27. நெப்போலியன் ஏன் திடீரென்று அந்த ஊரை விட்டுச் சென்றான்? ( 2 மதிப்பெண்கள்)

28. கிழவியால் ஏன் நெப்போலியனை அடையாளம் காண இயலவில்லை? (2 மதிப்பெண்கள்)

P4

# TESTPAPER 6

<u>நள்ளிரவு நேரத்தில்..........</u>

1. 1 2. 4 3. 2 4. 2

5. 3 6. 2 7. 1 8. 4 9. 4

10. 3 11. 1 12. 3 13. 3 14. 1

15. 6 16. 8 17. 7 18. 4

19. மலை 20. தோல் 21. ஒளி 22. வெல்லத்தை 23. இலை

24. கிழவி ஆப்பிள், திராட்சை, வாழை போன்ற கனிகளை விற்றாள்.

25. நெப்போலியன் தன்னிடம் தரப்பட்டப் பணத்தைத் தொலைத்துவிட்டதால் அவன் கடனுக்குப் பழத்தை வாங்கி உண்டான்.

26. மறுநாள் பழத்தின் பணத்தைத் தந்துவிடுவதாக நெப்போலியன் கிழவிக்கு வாக்கு அளித்தான்.

27. நெப்போலியனின் தந்தைக்கு வேறு ஊருக்குச் வேலை மாற்றம் கிடைத்ததால் அவன் திடீரென்று அந்த ஊரை விட்டுச் சென்றான்.

28. கிழவியின் கண் பார்வை மோசமாகிவிட்டதால் அவளால் நெப்போலியனை அடையாளம் காண இயலவில்லை.